# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 141/2017

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள் திங்கட்கிழமை PW- இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW2 Examined as PW 2

| | | |
|---|---|---|
| Date | : | 22.01.2024 |
| Name | : | ராஜீவ்காந்தி |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1 present. A2 produced on P.T.warrant.

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுப்பட்டினம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன் . கடந்த 12.08.2012 தேதி சீர்காழி வட்ட காவல் ஆய்வாளராக வாகன ஓட்டுனராக பணிபுரிந்தேன். TN51G 0373 டாட்டா சுமோ வாகன ஓட்டுனராக இருந்தேன். 12.08.2012 தேதி திருவெண்காடு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட புதுத்துறை என்ற இடத்தல் மணிசங்கர் அய்யர் மக்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றதால்ஆய்வாளர் பந்தோஸ்பத்துக்கு சென்றார் நான் வண்டி ஓட்டிச்சென்றேன். பந்தோஸ்பத்து பணிமுடிந்ததிரும்ப வரும்போது சுமார் 4.00 மணியளவில் திருவாலி ரோடு வளைவு அருகே இரண்டு நபர்கள் வண்டிகளை மறித்து நின்றுக்கொண்டிருந்தார்கள் , ஆரன் அடித்தும் நகரவில்லை. பக்கத்தில் அமர்ந்திருந்த காவல்நிலைய ஆய்வயாளர்

இறங்கிபோய் அவர்களை கேட்டதற்கு போலீஸ்காரர்கள் என்றால் வழிவிடவேண்டுமா என்று ஆபாசமாக திட்டி பின்னர் பெயர் கேட்டு இளையராஜ என்பவர் திட்டினார் என்றும் ஆய்வாளரை பார்த்து என் அப்பா அம்மா சாராய வழக்கில் உள்ளே தள்ளிவிட்டாயா என்றும் திரும்ப வழக்கு போட்டால் போலீஸ்காரரை கொன்றால்தான்என்று சொல்லி கம்பியால் தாக்க வரும்போது கையால் தடுக்கவே இடது புற நெற்றிபுருவத்தில் ஆய்வாளருக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் பெயர் தெரிந்துக்கொண்ட கார்த்தி போலிஸ்க்கு இதே வேயைாகிபோய்விட்டது கொல்லாமல் விடமாட்டேன் கையால் தடுக்க ஆய்வாளருக்கு கையில்காயம் ஏற்பட்டது. அதன்பிறகு திருவெண்காடு ஆய்வாளர் வண்டி வந்தது அதற்குள் ஒடிவிட்டார்கள் அவர்களை பிடிக்க சென்றேன் அவரை சீர்காழி மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தேன். ஆய்வாளார் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம்நடைபெற்றது வைத்தீஸ்வரன்கோயில்காவல்நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் ஆய்வாளர் சர்க்குல் இன்ஸ்பெக்டர் என்பதால் அவர்தான். சம்பவம் நடைபெற்றது திருவெண்காடுகாவல் சரகம். சீர்காழி துணை கண்காணிப்பளார்உத்தரவின் பேரில் பந்தோஸ்பத்து செல்வதாக ஆய்வாளர் சொன்னார். பந்தோஸ்பத்து பணிக்கு என்னுடன் ஆய்வாளர் ஜீப்பில் வந்தார். பந்தோஸ்பத்து பணிக்கு சீர்காழி காவல்நிலையத்தில் இருந்து சென்றோம். காலை 9.30 மணிக்கு கிளம்பி 10.00 மணிக்கு நிகழ்ச்சிக்கு சென்றோம், மாலை 3.30 மணி முதல் 3.45 மணிக்கு நிகழ்ச்சி முடிந்தது. நிகழ்ச்சி முடிவு நேரம் துல்லியமாக தெரியவில்லை. நிகழ்ச்சி முடிந்து சீர்காழிக்கு திரும்பி வரும்போது சம்பவம் நடைபெற்றது. MP பந்தோஸ்பத்து பணி முடிந்து என்னுடன் ஜீப்பில் ஆய்வாளர் இருந்தார். சம்பவ இடம் வயல்வெளி என்றாலும் வீடு கடை எதுவும் இல்லை என்றாலும் சரிதான். சம்பவ இடத்தில் வயல்வெளியில் பக்கத்தில் ஆட்கள் இருந்தார்களா என்பதை நான் கவனிக்கவில்லை. சம்பவம் நடந்த ரோடு குறுகலான பாதை என்றால் சரியல்ல ஆனால்வளைந்து இருக்கும். 2வது எதிரி சம்பவ இடத்தில் இருசக்கர வாகனத்தில் நின்றுக்கொண்டிருந்தபோது நாங்கள் வந்த போலீஸ்ஜீப் அவரை

இடித்து தள்ளியது என்றால் சரியல்ல. பந்தோஸ்பத்திற்கு சென்றோம் எதிரிகேட்டதால் போலீஸ்க்கும்எதிரிக்கும் சண்டை நடந்தது என்றால்சரியல்ல சம்பவ இடம் போக்குவரத்து அதிகமாக உள்ள பகுதி என்பதால் 2 வது எதரி வாகனத்தை நிறுத்தி வைக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. போலீஸ்வுடன் எற்பட்ட வாக்குவாதத்தில் எதிரிகளை போலிசார் அடித்தனார் என்றால் சரியல்ல. எதிரிகைள ஜீப்பிலேயே வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து காட்டுமிரன்டிதனமாக அடித்துள்ளோம் என்றால் சரியல்ல. அதில் முதல் எதிரி மிலிட்ரி பணியில் இருப்பதாகவும் விடுமுறையில்வந்திருப்பதாகவும் சொல்லியதை காதில் வாங்காமல் அவரை அடித்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவத்தில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றாலும் அது அவருடைய ஆஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. போலிசார் எதிரிகளை அடித்ததால் அவருடைய தாயார் தனிப்பட்ட வழக்கு பதிவு செய்தால் எதிரிமீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கு மயிலாடுதுறை நீதித்துறை நடுவர் எண்1 ல் CRMP.41/2013 நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக திருவெண்காடு ஆய்யவாளர் விசாரணை செய்தார். வழக்கு தொடர்பாக ஆஜர்எதிரிகள் ஆபாசமாக பேசவில்லை என்றாலும் அ.சா.1 க்கு எவ்வித காயமும் ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எவ்வித தடயபொருளும்கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சிகிச்சைக்கு சேர்த்தது நான்தான். அன்பழகன் என்ற ஆய்வாளர் உடன் இருந்தார். அ.சா.1 எத்தனை நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டு எப்போது விடுவிக்கப்பட்டார் என்பது தெரியவில்லை. சம்பவத்தை நான்நேரில் பாரக்க்வில்லை என்றாலும்சம்பவ நேரத்தில் நான் அங்கு இல்லை என்றாலும் ஆய்வாளர் என் உயர்அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.